DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| OS.No. | : | 83/2021 |
| Deposition of Witness for | : | P.W. |
| | : | D.W.2 |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சீனிவாசவரதராஜபெருமாள் |
| Father's Name | : | முத்துச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.04.2026

**முதல் விசாரணை:**

நான் பிரதிவாதி தரப்பில் 2 வது சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**குறுக்குவிசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். அந்த அழைப்பானையைக் கொண்டு வந்துள்ளேனா என்றால் 15.04.2026 ம் தேதியிட்ட வாய்தாவில் நீதிமன்றத்தில் கொடுத்துவிட்டேன். நான் நிரூபணவாக்குமூலத்தில் கூறியிள்ள விவரங்களை எப்போது கூறியுள்ளேன் என்றால் எனக்கு அழைப்பாணை கிடைத்தவுடன் எனது வழக்கறிஞர் வசம் அலைபேசி மூலம் தகவல் கொடுத்து அதன் பின்னீட்டு நான் கொடுத்த வாக்குமூலத்தை அவர் பதிவு செய்து வைத்ததில் நான்

கையெழுத்து செய்தேன். எனக்கு வந்த அழைப்பாணையில் வழக்கறிஞரின் அலைப்பேசி எண் குறிப்பிடப்படவில்லை என்ற நிலையில் எதன் அடிப்படையில் வழக்கறிஞரிடம் கேட்டேன் என்றால் என் அத்தான் மற்றும் பிரதிவாதியான சரவணன் என்பவரிடம் கேட்டு அதன் பின்னர் வழக்கறிஞரிடம் பேசினேன். சரவணன் கூறிய விபரங்களின் அடிப்படையிலும் நிரூபணவாக்குமூலம் தயார் செய்யப்பட்டு அதில் என்னால் கையெழுத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள கையெழுத்து யார் உடையது என்றால் என் மாமா பிச்சைமுத்து கையெழுத்து ஆகும்.

2. நான் கையெழுத்து போட்டதாக நான் சொல்லியுள்ள நிரூபணவாக்குமூலத்தில் எந்த இடத்தில் வைத்து பி.வா.சா.ஆ.2 ல் நான் கையெழுத்து செய்ததாக சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை, ஆனால் சார்பதிவாளர் அலுவலத்தில் வைத்துதான் கையெழுத்து போட்டேன். அது போல் மற்ற சாட்சிகளும் எங்கு வைத்து உயிலில் கையெழுத்து போட்டார்கள் என்று நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள எனது மாமா பிச்சைமுத்து என்பவரின் கையெழுத்துக்கும் வேறுபாடு உள்ளது என்றால் இல்லை. உயில் ஆவணம் எழுதி வைக்கும் போதும் பிச்சை முத்து இறக்கும் போதும் அவர் எவ்வாறு இருந்தார் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். உயில் ஆவணம் எழுதிவைக்கும் போது யார் யார் உடன் வந்தார்கள் என்றால் நான், மாமா, அத்தைசென்றோம் அதற்கு முன்பு மற்றொரு சாட்சியும் பத்திர எழுத்தரும் இருந்தார்கள்.

3. உயில் ஆவணம் பி.வா.ஆ.2 ஆவணம்எழுதிவைக்கும் போது எனது மாமாவிற்கு என்ன என்ன வியாதிகள் இருந்தது என்றால் வியாதிகள் இல்லை எந்த மருத்துவமனையிலும் சிகிச்சை மேற்கொள்ளவில்லை. உயில் ஆவணம் எழுதிவைக்கும் எனது அத்தை எந்த நிலையில் இருந்தார் என்றால் 6 ஆண்டு களுக்கு முன்பே இடது கை வாதம் ஏற்பட்டு வாத நோயில் இருந்தார். உயில் ஆவணத்தில் நான் கையெழுத்து செய்ததாக சொல்லும் விவரத்தையும், சாட்சியும் ஆவண எழுத்தரும் எத்தனை மணிக்கு பார்த்தார்கள் என்றும், சாட்சி கையொப்பம் செய்ததை எத்தனை மணிக்கு நான்

பார்த்தேன் என்றும் உயில் ஆவணம் எழுதி வைத்த எனது மாமா மற்றும் அத்தை எத்தனை மணிக்கு கையெழுத்து செய்ததார்கள் என்று நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. நான் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் உயில் எழுதி வைத்ததை நான் நேரில் பார்க்காமல் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மாமாவிற்கு மனநலம் சரியில்லாமலும், தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று அறியாமல் இருந்தார் என்றும் அப்போது பிரதிவாதி போலியாக இந்த உயில் ஆவணத்தை உற்பத்தி செய்ததில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.